DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.8/2025

**prosecution witness: LW-9 as PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகராஜ் | பதவி | : | காவல் ஆய்வாளர் |
| த/பெ. | : | சண்முகம் | வயது | : | 49 |
| ஊர் | : | துாத்துக்குடி | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>16.02.2026</u>

( 1 முதல் 8 எதிரிகள் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சாட்சி காணொலி வாயிலாக விசாரிக்கப்பட்டார்.)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2023ம் தேதி மதியம் 2.00 மணியளவில் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் அலுவலில் இருந்த போது மண்டபம் இந்திய கடலோர காவல் படையை சேர்ந்த டெபுடி கமாண்டர் திரு.அகில் பதான் என்பவர் அவருடன் பணிபுரியும் நவநீதன் ஐ.சி.ஜி.எஸ். என்பவருடன் ஒரு புகார் மனு இலங்கை நாட்டை சேர்ந்த மீன்பிடி பைபர் படகில் இந்திய நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி முறையான பாஸ்போர்ட், விசா போன்ற அரசு ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக இந்திய நாட்டிற்குள் வந்திருந்த 8 இலங்கை மீனவர்களையும் காவல் நிலையத்தில் ஆஜர் செய்து மேல்விசாரணை செய்தேன். நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார்.

2. மேற்படி புகாரினை பெற்று மண்டபம் கடற்கரை காவல் நிலைய குற்ற எண் 31/2023 சட்டப்பிரிவு 14சி Foreigners act மற்றும் 3a, 6a, Passport Act entry into India Rule என்ற சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**மண்டபம் மெரைன் காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை அசல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அசல் புகார், மற்றும் முதல் தகவல் அறிக்கையினை கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே 14.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளை மண்டபம் கடற்கரை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து

திரேக பரிசோதனை முடித்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன். இவ்வழக்கின் 1வது எதிரியான ரெட்மண்ட் டயாஸ் என்பவர் மேற்படி எதிரியை கைது செய்து விசாரணை செய்தபோது ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்தார். அதனை நிலையத்தில் ஆஜரில் இருந்த முதல் நிலை காவலர் 1059 திரு.கருணாநிதி, அவில்தார் 3301 திரு.குமார் ஆகியோர்கள் முன்னிலையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

3. அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்திய கடலோர காவல் படை மண்டபம் அலுவலகத்தில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 பைபர் படகுகளையும், 5 ஜிபிஎஸ் கருவிகளையும், மேற்படி எதிரிகள் பயன்படுத்திய இலங்கை சிம் கார்டுடன் கூடிய 4 செல்போன்களையும், அடையாளம் காட்டி ஒப்படைத்தார். (**மேற்சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை கூட்டிச் சென்றால் ........ எங்களது 4 பைபர் படகுகளையும், 5 ஜிபிஎஸ் கருவிகளுடன் இலங்கை சிம் கார்டுகளுடன் கூடிய 4 செல்போன்கள் அடையாளம் காட்டி" என்ற பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து படிவம் 95 மூலம் மேற்படி பொருட்களை கைப்பற்றினேன். (**அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

4. பின்னர் சாட்சிகள் ஆகுல்பதான், நவநீதன், மு.நி.கா.கருணாநிதி, அவில்தார் குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரிகளை 25.10.2023 ம் தேதி கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அடைப்புக்காவல் பெற்று தக்க வழிக்காவல் மூலம் சென்னை புழல் சிறைச்சாலையில் நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தினேன். நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு வழிக்காவல் செய்த உதவி ஆய்வாளர்கள் முகமது தாரிக் அமீன், யாசர் மௌலானா, பெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். எனது முதல்கட்ட விசாரணையை முடித்து அரசு ஆணையின்படி மேற்படி வழக்கு கோப்பினை இராமநாதபுரம் மாவட்ட சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு அனுப்பிவைத்தேன். மேற்படி வழக்கு தொடர்பாக தனுஷ்கோடி காவல் நிலைய குற்ற எண் 82/2023 சட்டப்பிரிவு 14c Foreigner Act 3a, 6a Passport Rule ன்கீழ் வழக்கு சார்பு ஆய்வாளர் ஷாகித் இஸ்ஹாக் அவர்கள் பதிவு செய்தார். தனுஷ்கோடி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கு

தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மண்டபத்தில் வி.ஏ.ஒ அலுவலகம் உள்ளிட்ட ரெவன்யு அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். மண்டபம் மெரைன் காவல் நிலையம் அருகே அரசு அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக புகாரில் சொல்லப்பட்டுள்ள விசயங்களைத்தான் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். புகாரில் சொல்லப்படாத விசயங்களை முதல் தகவல் அறிக்கையில் சட்ட ரீதியாக பதிவு செய்ய முடியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி, படிவம் 95, ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் வாங்கினீர்களா என்றால் இல்லை.

2. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 23.10.2023 ம் தேதி 13.35 மணி என்றால் சரிதான். சமூக நீதிமன்றத்திற்கு எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்துவதற்கு 25.10.2023 ம் தேதி காலை 7.00 மணி என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று 2 நாட்கள் கழித்துத்தான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தீர்கள் என்றால் சரிதான். இந்திய கடலோர காவல் படையினர் ரோந்து அலுவலில் இருக்கும்போது உயர் அதிகாரியிடம் தகவல் தெரிவித்து ரோந்து முடித்து வருவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்த 24 மணி நேரத்திற்கு முன்பாக கணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளேன். நான் சொல்லியுள்ள காலதாமதத்திற்கான காரணங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளீர்கள் அது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதேபோல் புகாரில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை.

3. புகாரில் புகார் கொடுத்த தேதி 24/OCT/2023 என இருக்கிறது என்றால் சரிதான். அந்த புகாரானது முழுவதுமாக டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் தேதி 24 மட்டும் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் புகார் கொடுக்க வரும்போது யார் யார் என்னுடன் பணியில் இருந்தார்கள் என்றால் மு.நி.காவலர் கருணாநிதி, அவில்தார் குமார் ஆகியோர்கள் இருந்தார்கள். அந்த நேரத்தில் வேறு யாரும் பணியில் இல்லை. நான் புகாரை பெறுவதற்காக புகார்தாரரின் அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை. புகார்தாரர் புகார் கொடுக்க வரும்போது அவருடன் யார் யார் வந்தார்கள் என்றால் அக்குல்பதான் டெபுடி கமாண்டர், நவநீதன் ஆகியோர்கள்

வந்தார்கள். புகாரில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லாதபட்சத்தில் முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர்களை எவ்வாறு தட்டச்சு செய்தீர்கள் என்றால் மேற்படி எதிரிகள் குறித்து முழுமையான விபரம் தெரியாததனால் கடலோர பாதுகாப்பு குழுத்தில் விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

4. இந்த வழக்கில் தங்களது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இந்த எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது கிராம நிர்வாக அலுவலரையோ அல்லது அரசு அலுவலரையோ சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, படிவம் 95 ஆகியவற்றை யார் எழுதினார்கள் என்றால் மு.நி.கா. கருணாநிதி அவர்களால் எதிரி சொல்ல சொல்ல எழுதப்பட்டது. எதிரிகள் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எத்தனை மணி வரை காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் 24.10.2023ம் தேதி மதியம் 14.00 மணி முதல் 25.10.2023ம் தேதி காலை 6.00 வரை மண்டபம் கடற்கரை காவல் நிலையத்தில் இருந்தார்கள். அந்த 8 எதிரிகளும் உங்கள் காவல் நிலைய பாராவில்தான் முழுமையாக இருந்தார்கள் என்று சொன்னால் இவ்ழக்கின் 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மண்டபம் கடலோர காவல் படை அலுவலகத்தில் வழக்கின் சொத்துக்களை அடையாளம் காட்டி ஆஜர் செய்ய அழைத்துச் சென்றேன். கைப்பற்றுதல் மகஜரில் ஆர்.நவநீதன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த கைப்பற்றுதல் மகஜரில் எழுதப்பட்டது எல்லாமே ஊதா பேனாவில்தான் எழுதப்பட்டது வேறு பேனாவால் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

5. கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றுவதற்காக செல்லும்போது அங்கு யார் யார் பணியில் இருந்தார்கள் என்றால மு.நி.காவலர் கருணாநிதி, அவில்தார் குமார் ஆகியோர் மட்டும்தான் பணியில் இருந்தார்கள் வேறு யாரும் பணியில் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருட்கள் இவர்களை தவிர வேறு யாருக்கும் தெரியாது. புகார்தாரர் புகார் கொடுக்கும்போது 12 நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் சொல்லப்பட்டுள்ள பொருட்களுக்கும் எதிரிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மற்ற 4 மீனவர்களும் இந்திய மீனவர்கள். அந்த இந்திய மீனவர்கள் 4 நபர்கள் கடத்திச் சென்ற கடத்தல் பொருட்கள், படகு

ஆகியவற்றை இந்திய சுங்கத்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். அந்த பொருட்களுக்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் தடை செய்யப்பட்ட பொருட்கள் கிடையாது என்றால் சரிதான். சம்பவ இடம் என்பது கடலோர பகுதி என்றும் அதில் எந்தவித அடையாளமும் தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. கடலோர பாதுகாப்பு குழுவினரால் உயர் அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்திய வெளியுறவு துறை ஆகியவற்றிற்கு கைது செய்யப்படும்போது தகவல் தெரிவித்து அவர்கள் மூலமாகத்தான் சம்பந்தப்பட்ட நாட்டிற்கு தகவல் தெரிவித்து கைது செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கடிதம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அவ்வாறு வழக்கம் ஏதும் கிடையாது.

6. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கு ஆவணங்களை அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சாட்சிகள் யாரையும் முறையாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.16 10:19:36 +0530